இந்திய உச்ச நீதிமன்றம்

[2021] 2 உச்ச நீதிமன்ற அறிக்கைகள் 124

தீர்ப்பு தேதி: மார்ச் 01, 2021

முன்னிலை :

மாண்புமிகு நீதியரசர் திரு. இந்து மல்ஹோத்ரா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

உரிமையியல் மேல்முறையீடு எண் 946/2016

M/s. சித்ரலேகா பில்டர்ஸ் மற்றும்
ஒருவர் அனில் ஜீ. ஷா ன் அங்கீகாரம்
பெற்ற பங்குதாரரின் கணவர் ... மேல்முறையீட்டாளர்கள்

–எதிர்–

ஜீ.ஐ.சி. ஊழியர்கள் சோனல் விஹார்
கூட்டுறவு வீட்டுவசதி வாரியம் லிட்.,
மற்றும் ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 – பிரிவு 96 – மேல்முறையீட்டு உரிமை – மேல்முறையீட்டாளர்கள் கையெழுத்து செய்யாத அ.வ.எண்.1335/1998 ல் 16.02.2005 ல் பிறப்பிக்கப்பட்ட ஒத்திசைவு

உத்தரவின்பேரில் மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கினை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்ததன் பேரில் மேல்முறையீடு – மேற்படி 16.02.2005ம் தேதிய ஒத்திசைவு உத்தரவு ஏற்பட்ட நடைமுறைகளில் மேல்முறையீட்டாளர்கள் ஒரு தரப்பினர் இல்லை – மேல்முறையீட்டாளர்கள் ஒரு தரப்பினர்களாக இல்லாத நிலையில் வழக்கின் தரப்பினர்கள் ஏற்றுக்கொண்ட நிபந்தனையின் அடிப்படையில் உயர்நீதிமன்றத்தால் 16.02.2005ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்தாது. மேலும், மேற்படி உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலைமுறை வழக்கு எண்.3162/2005ல் மேல்முறையீட்டாளர்களின் உரிமை குறித்து தனிப்பட விசாரிக்கவும் உள்ள நிலையில் – மேற்படி ஒத்திசைவு ஷரத்துகளில் மேல்முறையீட்டாளர்கள் தரப்பினர்களாக இல்லாத நிலையில் 16.02.2005 மற்றும் அதனைத்தொடர்ந்து 13.10.2005ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்தாது. மேலும், மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த வழக்கில் சட்டப்படியும், தகுதியின் அடிப்படையிலும், சட்ட விளைவுகள் பரிசோதிக்கப்படும் நிலையில் – தரப்பினர்கள் – ஒத்திசைவு தீர்ப்பாணை.

நீதிமன்றம் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தல்

தீர்வு: 1. 16.02.2005ல் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்புதல் விதிமுறைகளின் அடிப்படையில் அ.வ.எண்.1335/1988ல் கடந்த 03.10.2005ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் 96–ன்படி உரிமை இருப்பதாக கூறி மேல்முறையீட்டாளர்கள் பின்னிட்டு சேர்க்கப்பட்டுள்ளனர் என்னும் மேற்படி ஒத்திசைவு உத்தரவில் மேல்முறையீட்டாளர்கள் தரப்பினர்களாக

இல்லாத நிலையில் மேற்படி 16.02.2005 மற்றும் 03.10.2005 தேதிகளில் ஏற்பட்ட ஒத்திசைவு உத்தரவுகளை, அதன் சட்ட விளைவுகளை பரிசோதனை செய்யும் வகையில் அதனை திரும்ப கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த நிலைமுறை வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி 16.02.2005 மற்றும் 03.10.2005 தேதிய ஒத்திசைவு உத்தரவுகளின்பேரில் அதன் தகுதிகளை பரிசோதிக்க இயலுமா. [பத்தி–19] [135–D–G]

2 . மேல்முறையீட்டாளர்களின் உரிமைகளை பொறுத்தவரையில் உயர்நீதிமன்ற தீர்ப்புரையில் அது பாதுகாக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புரையில் உயர்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் மேல்முறையீட்டாளர்களை பாதிக்காத நிலையில், நிலுவையில் உள்ள அ.வ.எண்.3162/2005 ல் மேற்படி ஒத்திசைவு தீர்ப்பினை கருத்தில்கொள்ளாமல் மேற்படி வழக்கின் தன்மை, தகுதி அடிப்படையில் பரிசீலிக்கவேண்டும். [பத்தி –20] [135–G–H; 136–A–B]

உரிமையியல் மேல்முறையீட்டு ஆள்வரை:

உரிமையியல் மேல்முறையீட்டு எண்.946/2016

அ.வ.எண்.1335/1988 ன் மேல்முறையீட்டு வழக்கு 558/2007 ல் பாம்பே உயர்நீதிமன்றத்தால் 22.07.2014 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை

நிகில் நய்யார், முதுநிலை வழக்குரைஞர் (AC)
ஜெய் சாவ்லா, முதுநிலை வழக்குரைஞர், திருமதி.பிரேர்ணாமேத்தா, ஓ.பி.பதானி – எதிர்மனுதாரர் தரப்பு வழக்குரைஞர்கள்.

அனில் ஜீ.ஷா – மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. இந்து மல்ஹோத்ரா:–

1. அ.வ.எண்.1335/1988 ல் 16.07.2005 ல் பிறப்பிக்கப்பட்ட ஒத்திசைவு தீர்ப்பின்பேரில் செய்த மேல்முறையீட்டு வழக்கு 558/2007 ல் மாண்புமிகு பாம்பே உயர்நீதிமன்றத்தால் 22.07.2014 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் பேரில் இம்மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பாம்பே முலுந் கிராமம் C.T.S. எண் 727, சர்வே எண் 218 ல் உள்ள 5082 சதுரடி இடத்தின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் சுருக்கம்.

A இந்த வழக்கின் பின்னனி உண்மைகள் சுருக்கமாக பின்வருமாறு கூறப்படுகின்றன.

(i) 1 முதல் 52 பிரதிவாதிகள், வாதியான சித்ரலேகா பில்டர்ஸ் கம்பெனிக்கு (பின்னர் ஒன்று அடங்கியது)

B (துக்காராம் பாலிராம் நால்வாட் மற்றும் கௌசம் கோர்லே) அவர்களால் நியமிக்கப்பட்டவர்களுக்கோ, கிரயம் செய்துகொடுப்பதாக ஒப்புக்கொண்டு பாக்கி கிரையத்தொகை ரூ.35,00,000/–ஐ பெற்றுக்கொண்டு 28.04.1980 ல் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை எழுதிக்கொடுத்தனர்.

C (ii) பின்னிட்டு, மேற்படி சித்ரலேகா பில்டர்ஸ் நிறுவனத்தினர் தாவா சொத்தை மேம்படுத்தி அதில் கட்டப்பட்ட பகுதியையும் சேர்த்துக்கொடுப்பதாக 1ம் எதிர்மனுதாரரான G.I.C.சோனால்விகார் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிட்., உடன் ஒரு உடன்படிக்கையை 09.05.1980ல் எழுதிக்கொடுத்தனர்.

D (iii) பின்னிட்டு, 01.07.1980ம் தேதி மேற்படி குசம் கோருலேவும், துக்காராம் பாலிராம் நால்வாட்–ம் தங்களுக்கிடையே கூட்டு உரிமையாளர் பத்திரத்தினை ரத்து செய்துவிட்டனர்.

3. **அ.வ.எண் 1335/1988**

E 3.1 மேற்படி 28.04.1980ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின்படி வழக்குச் சொத்தை பொறுத்து விற்பனை ஆவணத்தை எழுதிக்கொடுத்து அதன் வழக்கு சொத்தை வழங்க வைட்டி குடும்பத்தினர் முன்வராததால் 1ம் எதிர்மனுதாரரான சங்கமும், 2ம் எதிர்மனுதாரரான குசம் கோருலேவும், மேற்படி வைட்டி குடும்பத்தினர் மீது குறித்த வகையில் பரிகாரம் கோரி மாண்புமிகு பாம்பே உயர்நீதிமன்றத்தில் அ.வ.எண்.1335/1988ல் வழக்கு தாக்கல் செய்தனர்.

F 3.2 மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது 2ம் எதிர்மனுதாரர் குசம் கோருலேவும், 2ம் மேல்முறையீட்டாளரான நினா அனில் ஷா மற்றும் இரு பங்குதாரர்களான எஸ்.ஜே.பகாரே மற்றும் எஸ்.என்.காடேகர் என்பவரும் மேற்படி சித்திரலேகா பில்டர்ஸ்

நிறுவனம் மறு சீரமைக்கப்பட்டதும், அதனுடன் சேர்த்து 08.04.1989 ல் கூட்டுப்பங்குதாரர் பத்திரத்தை எழுதிக்கொண்டனர். அதன்படி 2ம் மேல்முறையீட்டாளர் சித்திரலேகா பில்டர்ஸ்ல் 50% கூட்டு உரிமையாளர் ஆவார்.

G 3.3 இந்நிலையில், 26.01.1996ம் தேதி துணைஒப்பாவணம் ஒன்று 2ம் எதிர்மனுதாரர் மற்றும், 2ம் மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டு பங்குதாரர்களாலும் எழுதப்பட்டது. அதன்படி மேற்படி S.J.பகாரே 2ம் மேல்முறையீட்டாளருக்கு தனக்கு பாத்தியப்பட்ட பங்கு முழுவதையும் விடுதலை செய்துகொடுத்துவிட்டார். அதேபோல் மேற்படி எஸ்.எஸ்.காடேகர் தனது பங்கு முழுவதையும், 2ம் மேல்முறையீட்டாளருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் சமமாக விடுதலை செய்துகொடுத்துவிட்டார்.

M/S.சித்ரலேகா பில்டர்ஸ் மற்றும் வகையறா

எதிர்

G.I.C. சோனல் விகார் கூட்டுறவு வீட்டுவசதி பணியாளர்கள் சங்கம் லிட்.,

(மாண்புமிகு நீதியரசர் திரு. இந்து மல்ஹோத்ரா)

3.4 அ.வ.எண்.1335/1988 ல் 31.08.1991 ல் உத்தரவு ஒன்றை மாண்புமிகு பாம்பே உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டு அறிவிப்பு எண்.1311/1988 ன்படி நீதிமன்ற உடைமை காப்பாளர் ஒருவரை நியமித்தனர் . இதில் 2ம் எதிர்மனுதாரர், வழக்கு சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டு , மேற்படி வழக்கு சொத்தினை சுற்று மதில்சுவர் எழுப்பியது குறிப்பிடத்தக்கது.

3.5 மேல்முறையீட்டாளர்கள் வழக்கு எண்.1335/1988 ல் தங்களை இணைவாதிகளாக சேர்க்கச்சொல்லி நீதிமன்ற அழைப்பாணை எண்.1334/2004 ல் மனு தாக்கல் செய்தனர். எதிர்மனுதாரர்களும் தங்களை பிரதிவாதிகளாக மாற்ற மனுக்கொடுத்தனர்.

மேற்படி நீதிமன்ற அழைப்பாணைகளில் 26.10.2004 ல் பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதில் மேல்முறையீட்டாளர்கள் தங்களை இணைவாதிகளாக சேர்க்கக் கூறிய நீதிமன்ற அழைப்பாணை நிலைக்கத்தக்கதல்ல என தள்ளுபடி செய்யப்பட்டது, 1ம் எதிர்மனுதாரரான சங்கத்தை 54ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டது.

3.6 மேற்படி 26.10.2004 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மேல்முறையீட்டாளர்கள் மேல்முறையீட்டு வழக்கினை 598/2005 என்ற எண்ணில் தாக்கல் செய்தனர்.

3.7 **16.02.2005 ல் ஏற்பட்ட முதல் ஒத்திசைவு தீர்ப்பாணை**

மேற்படி மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் உள்ளபோது 16.02.2005 ல் 2ம் எதிர்மனுதாரருக்கும் வைட்டி குடும்பத்தாருக்கும் சேர்த்து சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டனர். அதன்படி 2ம் எதிர்மனுதாரருக்கோ, அவரால் நியமிக்கப்பட்டவருக்கோ பாக்கிக் கிரையத்தொகை ரூ.35,00,000/-ஐ பெற்றுக்கொண்டு சொத்து மாற்றளிப்பு ஆவணத்தை எழுதிக்கொடுக்க வைட்டி குடும்பத்தினர் ஒப்புக்கொண்டனர். மேற்படி வைட்டி குடும்பத்தாருக்கும்

சித்ரலேகா பில்டர்ஸ்க்கும் இடையே ஏற்பட்ட 28.04.1980 ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டாளர்கள் மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2 ம் எதிர்மனுதாரர் குசம் கோருலே மற்றும் வைட்டி குடும்பத்தினருக்கும் இடையே ஏற்பட்ட சமாதானப்படி தனி நீதிபதி 16.02.2005 ல் ஒத்திசைவு தீர்ப்பாணையை பிறப்பித்தார். அதன்படி அ.வ.எண்.1335/1988 வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்பட்டது. இருப்பினும், 54 ம் பிரதிவாதியான சங்கத்தை பொறுத்து இவ்வழக்கானது தொடர்ந்து நடைபெற்றது.

3.8 இந்நிலையில், 2 ம் எதிர்மனுதாரர் குசம் கோருலே வழக்கு சொத்தை தி/ள்.ஓஸ்வால் எண்டர்பிரைசஸ்/பில்டர்ஸ் நிறுவனத்திற்கு கடந்த 26.07.2005 ல் விற்றுவிட்டார். மேற்படி நிறுவனம் அ.வ.எண்.1335/1988 57 வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டது.

3.9 இந்நிலையில் மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்ற அழைப்பாணை எண்.1334/2004 ல் தாக்கல் செய்த மேல்முறையீடு எண்.598/2005 ல் சேம்பர் சம்மன் எண்.961/2005 ஐ தாக்கல் செய்து தங்களை வாதிகளாக சேர்ப்பதற்கு பதிலாக, பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டும் என கோரினார். உயர்நீதிமன்ற நடுவர் 19.08.2005 ல் மேற்படி சேம்பர் சம்மன் எண்.961/2005 ஐ அனுமதித்து அவர்களை வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க

உத்தரவிட்டது. ஏனென்றால், அவர்கள் அவசிய தரப்பினர்கள் என்பதால் சேர்க்கப்பட்டனர்.

3.10 **முதல் ஒத்திசைவு தீர்ப்பாணை எதிர்த்து மேல்முறையீடு**

மேற்படி அ.வ.எண்.1335/1988 ல் பிரதிவாதிகளாக மேல்முறையீட்டாளர்கள் சேர்க்கப்பட்டதும், அவர்கள் 16.02.2005 ம் தேதிய ஒத்திசைவு தீர்ப்பாணையை எதிர்த்து 558/2007 என்ற எண்ணில் மேல்முறையீடு செய்தனர். மேற்படி 16.02.2005 ம் தேதிய ஒத்திசைவு மனுவில் மேல்முறையீட்டாளர் தரப்பினர் இல்லை எனக்கூறி அந்த மேல்முறையீட்டை 22.07.2014 ல் உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி 16.02.2005 ம் தேதிய உத்திரவு மேல்முறையீட்டாளர்களின் உரிமையை பாதிக்காது என்றும், எனவே, அதில் தலையிடவேண்டியதில்லை என்றும் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேற்படி 22.07.2014 ம் தேதிய உத்தரவின்பேரில் இம்மேல்முறையீடு .

3.11 **03.10.2005 ம் தேதிய 2 ம் ஒத்திசைவு தீர்ப்பாணை**

கடந்த 03.10.2005 ல் 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் மேற்படி ஓஸ்வால் எண்டர்பிரைசஸ் நிறுவனத்துடன் சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி, 1 ம் எதிர்மனுதாரர் ஓஸ்வால் நிறுவனத்திடமிருந்து ரூ.50,00,000/–ஐ பெற்றுக்கொண்டு வழக்கு சொத்தை ஓஸ்வால் நிறுவனத்திற்கு மாற்றவேண்டும் என்றும்,

மேற்கொண்டு வழக்கு சொத்தில் உரிமைக்கோரக்கூடாது என்றும், தனி நீதிபதி இவற்றினை பதிவு செய்துகொண்டு 2 வது ஒத்திசைவு தீர்ப்பாணையை பிறப்பித்தார். இதனை மேல்முறையீட்டாளர்கள் ஆட்சேபணை செய்தும், தனி நீதிபதி மேற்படி தீர்ப்பின்பேரில் புகார்தாரர்களுக்குள் மேல்முறையீடு செய்ய வாய்ப்பளித்தும், நான்கு வாரங்களில் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை நீதிமன்ற உடமை காப்பாளரிடம் ஒப்படைக்கவும் உத்தரவு பிறப்பித்தார்.

4 **வழக்கு எண்.3162/1965**

2 ம் மேல்முறையீட்டாளர் மேற்படி 16.02.2005 மற்றும் 03.10.2005 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட ஒத்திசைவு தீர்ப்பாணைகள் சட்டவிரோதமானது என்றும், செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரி அ.வ.எண்.3162/2005 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

சித்ரலேகா பில்டர்ஸ் மற்றும் G.I.C. சோனல் விகார் வீட்டுவசதி பணியாளர்கள் சங்கம் லிட், (மாண்புமிகு நீதியரசர் திரு.இந்து மல்ஹோத்ரா)

சித்ரலேகா பில்டர்ஸ் 1 ம் பிரதிவாதியாகவும், குசம் கோருலே 2 ம் பிரதிவாதியாகவும், ஓஸ்வால் எண்டர்பிரைசஸ் 3 ம் பிரதிவாதியாகவும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டனர்.

அதில் கோரிய பரிகாரங்கள்:

(a) 15.07.2004 ல் பங்குதாரர் நிறுவனமான சித்ரலேகா பில்டர்ஸ் நிறுவனம் முடிந்துவிட்டது என விளம்புகை செய்யவேண்டும்.

(b) உயர்நீதிமன்றத்தாரின் உத்தரவு மற்றும் வழிகாட்டுதலின்படி

மேற்படி பில்டர்ஸ் நிறுவனத்தின் தொடர்பான நடவடிக்கைகள் செல்லாது மற்றும் முடிந்துவிட்டது ,

(c) மேற்படி நிறுவனம் முடிந்துவிட்ட நாளிலிருந்து அதன் கணக்கு வழக்குகளை எடுத்துக்கொள்ளவேண்டும் அல்லது வாதி மற்றும் 2ம் பிரதிவாதிக்கான பங்குகளை கணக்கிட்டு ஒப்படைக்கவேண்டும் .

(d) தேவையான அனைத்து உத்தரவுகளையும் பிறப்பிக்கவேண்டும்.

(e) அ.வ.எண்.1335/1988 ல் 16.02.2005ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒத்திசைவு தீர்ப்பாணையை சட்ட விரோதமானது, செல்லாது, அது வழக்கு சொத்தை கட்டுப்படுத்தாது.

(f) அ.வ.எண்.1335/1988 க்கு 03.10.2005 ல் பிறப்பிக்கப்பட்ட ஒத்திசைவு தீர்ப்பாணை சட்டவிரோதமானது, செல்லாது, அது வழக்கு சொத்தை கட்டுப்படுத்தாது.

(g) 25.07.2005ம் தேதிய வழக்கு சொத்தைப் பொறுத்த 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்து மாற்று ஆவணம் சட்டவிரோதமானது, செல்லாது, வழக்கு சொத்தைப்பொறுத்து நிறைவேற்றமுடியாது.

(h) மேற்படி தீர்ப்பாணையை ரத்துசெய்து 26.07.2005ம் தேதிய பத்திரத்தை ரத்து செய்யவேண்டும்.

(i) வழக்கு முடியும்வரை வழக்கு சொத்தைப்பொறுத்து, ஒரு பொருத்தமான நீதிமன்ற உடைமை காப்பாளரை நியமிக்கவும், (குறிப்பாக சான்றாவணம் B ஆக குறியீடு செய்யப்பட்ட தாவாவின்படி) 1908 உரிமையியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 40ன்படி உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்,

(j) வழக்கு முடியும்வரை 2 மற்றும் 3 பிரதிவாதிகளோ, அல்லது அவர்களது ஆட்களோ தாவா சொத்தில் உரிமை கோரவோ, நடவடிக்கை மேற்கொள்ளவோ, இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பித்தும்,

(k) மேற்படி i மற்றும் j பரிகாரங்களைப் பொறுத்து இடைக்கால பரிகாரங்கள் வழங்கியும்,

(l) வழக்கிற்கான செலவு தொகையும்

(m) மற்றும் வழக்கின்பொருட்டு தேயான உத்திரவுகள் பிறப்பிக்கவேண்டும் என்றும்,

இவ்வழக்கின் விசாரணையின்போது அ.வ.எண்.3162/2005 ல் சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் உள்ளது தெரியவருகிறது.

5 **சமரச நடவடிக்கைகள்**

5.1 2ம் மேல்முறையீட்டாளர் நினா அனில் ஷா மற்றும் 2ம்எதிர்மனுதாரர் குசம் கோருலே ஆகியோர்களுக்கிடையே சமரசம் செய்ய பாம்பே உயர்நீதிமன்றத்தால் 22.07.2005 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.சி.அகர்வால் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார்.

5.2 மேற்படி நீதிபதி சித்ரலேகா பில்டர்ஸ் நிறுவனம் 15.07.2004 ல் கலைக்கப்பட்டது என 01.08.2006 ல் உத்தரவு பிறப்பித்தார். மேற்படி வழக்கு சொத்து பங்குதாரர்கள் நிறுவனத்தின் சொத்து

அல்ல. 2 ம் மேல்முறையீட்டாளர் மேற்படி நிறுவனத்தின் செலவு தொகையில் 50% தொகையான ரூ.62,18,324/– ஐ 12% ஆண்டு வட்டியுடன் செலுத்தவேண்டும்.

5.3 03.10.2006 ல் ஏற்பட்ட உத்தரவினை ரத்து செய்து ஆட்சேபணைகளை 34 பிரிவின்படி மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்யவேண்டும்

மேல்முறையீட்டாளர்கள் 1996 ம் வருடத்திய சட்டப்பிரிவு 37 ன்படி நீதியராயத்தின் உயர்நீதிமன்ற நடுவர் 21.07.2014 ல் பிறப்பித்த உத்தரவின்பேரில் மேல்முறையீட்டு வழக்கு 813/2006 ல் தாக்கள் செய்யப்பட்டு, விண்ணப்பத்தை பிரிவு 34 ன்படி மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

5.4 தனி நீதிபதி பகுதியாக அனுமதித்து பிறப்பித்த 05.06.2017 ம் தேதிய உத்தரவின்பேரில் பங்குதாரர் நிறுவனம் கோரிய செலவு தொகை ரத்து செய்யப்படுகிறது.

5.5 2 ம் மேல்முறையீட்டாளர், 1996 ம் வருடத்திய சட்டம் பிரிவு 37 ன் கீழ் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு எண்.266–268/2017 தற்போதும் பரிசீலனைக்காக நிலுவையில் உள்ளது.

6 **உச்சநீதிமன்ற நடைமுறைகள்**

இந்த உரிமையியல் மேல்முறையீடு 22.07.2014 ம் தேதியிட்ட உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு

எண்.558/2017 (மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டது), அந்த மேல்முறையீடானது 16.02.2005 தேதியிட்ட முதல் ஒத்திசைவு தீர்ப்பாணையினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டது.

6.1 மேல்முறையிட்டாளர்களுக்கும், 2ம் எதிர்மனுதாரரான குசம் கோருலேக்குமான பேச்சுவார்த்தை தீர்வுக்கு இந்த நீதிமன்றம் முயற்சி செய்ததற்காக 19.11.2019 தேதியிட்ட அறிவிப்பினை பொறுத்து.

6.2 இந்த மேல்முறையீட்டாளர்கள் இ.ம.எண்.9/2016 என்ற மனுவினை அசல் எதிர்மனுதாரர்கள் 2 முதல் 54 (வைட்டி குடும்ப உறுப்பினர்கள்) ஆக காட்டப்பட்டுள்ளதை நீக்கச்சொல்லி தாக்கல் செய்து, அதாவது அனில் ஜி. ஷா –கணவர் மற்றும் 2ம் மேல்முறையீட்டாளரின் பொது அதிகாரம் பெற்றவர் மற்றும் 2ம் மேல்முறையீட்டளார் நீனா திரு.அனில் ஷா இந்த நீதிமன்றத்தில் சேம்பர் நீதிபதியிடம் ஆஜரானவர். அதுவும் இ.ம.எண்.9/2016 மேல் முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டு 28.11.2016ல் அதில் உள்ள சாதகபாதகங்களை மேல்முறையீட்டாளர்களே ஏற்றுக்கொள்வதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.

6.3 27.03.2018ல் மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த இ.ம.எண்.48308/2018 என்ற மனுவில் ஓஸ்வால் எண்டர்பிரைசசை ஒரு தரப்பினராக சேர்ப்பதைப்பொறுத்து,

6.4 இந்த நீதிமன்றம் 12.12.2019 ம் தேதிய உத்தரவின்படி ஒரு நிகில் நய்யார், என்ற மூத்த வழக்கறிஞரை நீதிமன்றத்திற்கு உதவி செய்யும்பொருட்டு உதவியாளராக மேல்முறையீட்டாளர்களுக்காக நியமித்து உத்தரவிட்டதன் பொருட்டு,

6.5 17.03.2020 ல் இந்த மேல்முறையீட்டார்கள் இ.ம.எண்.73241/2020 என்ற மனுவினை 2 முதல் 54 எதிர்மனுதாரர்களை மீண்டும் தரப்பினர்களாக இந்த உரிமையியல் மேல்முறையீட்டில் சேர்க்கச்சொன்னதன் பொருட்டு, (28.11.2016 ல் ஏற்கனவே நீக்கப்பட்டவர்கள்)

7. திரு.நிகில் நய்யாரின் வாதங்களை பெற்றும், மற்றும் திரு.ஜெய் சாவ்லா மூத்த வழக்கறிஞர் மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரானவர் மற்றும் திரு.அனில் ஜி.ஷா நேரில் அவராகவே ஆஜராகியும் வாதங்கள் கேட்கப்பட்டன.

8. **நாங்கள் இரண்டு இடைக்கால மனுக்களைப்பற்றி முடிவு செய்யும்போது,**

(i) இ.ம.எண்.48308/2018 ஆனது ஓஸ்வால் பில்டர்சை ஒரு எதிர்மனுதாரராக நிலுவையில் உள்ள உரிமையியல் மேல்முறையீட்டில் தரப்பினராக சேர்க்கச்சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாம்பே உயர்நீதிமன்றத்தில் நிலைமுறை வழக்கு எண்.3162/2005 ல் ஏற்கனவே 3 ம் பிரதிவாதியாக ஓஸ்வால் பில்டர்ஸ் சேர்க்கப்பட்டதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

(ii) இ.ம.எண்.73241/2020 என்ற மனுவும், தற்போது உள்ள சூழ்நிலையில் ஏற்கனவே நீக்கப்பட்ட 2 முதல் 54 எதிர்மனுதாரர்களை மீண்டும் எதிர்மனுதாரர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு செய்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

9. மேற்சொன்ன வழக்கறிஞரின் வாதங்கள் விரிவாக கேட்கப்பட்டன. பாம்பே உயர்நீதிமன்றத்தின் நிலைமுறை வழக்கு எண்3162/2005 நிலுவையில் இருக்கும்போது ஒத்திசைவு தீர்ப்பாணையான 16.05.2005, 03.10.2005 தேதியிட்டதீர்ப்பாணைகளும் செல்லத்தக்கதா என்ற முடிவு செய்யவேண்டியுள்ளது.

10. மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் தமது வாதத்தில் 16.05.2005 மற்றும் 03.10.2005 தேதியிட்ட 1335/1988 என்ற வழக்கில் மேல்முறையீட்டாளர்கள் கையொப்பம் செய்யவில்லை. அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர்களின் வாதத்தினை மற்றொரு வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதால் மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்யக்கூடாது என்பதை எடுத்துரைத்தார்கள். மேல்முறையீட்டாளர்களுக்கு தெரியாமல் அவர்கள் கையொப்பம் இடாமல் சொல்லப்பட்ட ஒத்திசைவு தீர்ப்பாணை செல்லத்தக்கதல்ல என்று

எடுத்துரைத்தார்கள்.

11. அதுமட்டுமின்றி இந்த மேல்முறையீட்டாளர்கள் வழக்கு எண்.1335/1988 காலதாமதமாக சேர்க்கப்பட்டிருந்ததாலும், அவர்களின் உரிமையை 16.02.2005 தேதியிட்ட உத்திரவில் சொல்லப்படாத காரணத்தினால் சட்டத்தின் பார்வையில் அந்த தீர்ப்பாணை செல்லத்தக்கது அல்ல. எனவே, 16.02.2005 தேதியிட்ட உத்தரவானது நீக்கறவு செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

12. 16.02.2005 ஒத்திசைவு தீர்ப்பாணையை வைத்துக்கொண்டு 22.07.2005 தேதியிட்ட வழக்கு சொத்தினை 3ம் மனிதரான ஓஸ்வால் எண்டர்பிரைச்ஸ்க்கு விற்றது மேல்முறையீட்டாளர்களின் உரிமையையும், சுவாதீனத்தையும், எந்தவிதத்திலும் பாதிக்காது என்றும், மேல்முறையீட்டாளர்களின் வாதங்களை கேட்காமல் மேற்கண்ட நடவடிக்கைகள் நடந்துள்ளதால் அது மேல்முறையீட்டாளர்களுக்கு அநீதி இழைத்ததற்கு சமம்.

13. மேல்முறையீட்டாளர்கள் நேரில் ஆஜராகி பிரிவு 96 சிபிசி–ன்படி இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை மேற்கோள்காட்டி வாதிட்டார்.

14. மறுபுறம், பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை ஆதரிக்கும் அதே வேளையில், தடை செய்யப்பட்ட தீர்ப்பின் கீழ்

மேல்முறையீட்டாளர்களின் உரிமைகள் உயர் நீதிமன்றத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளன என்றும், மேல்முறையீட்டாளர்களால் எதற்காக வேண்டுறைக்கப்படுகிறது என்றும் சமர்பித்தார். உடனடி மேல்முறையீடு என்பது வழக்கு எண். 3162/2005 இல் உள்ள சவாலுக்குரிய விஷயமாகும். மேல்முறையீடு செய்பவர்கள் தங்களின் தீர்வைக் நிலைமுறை வழக்காக தொடரலாம். கொடுக்கப்பட்ட சூழ்நிலையில், இந்த நீதிமன்றத்தின் தலையீட்டைக் கோரும் இடையூறு செய்யப்பட்ட தீர்ப்பில் உயர் நீதிமன்றத்தால் எந்த தவறும் செய்யப்படவில்லை.

15. நிலைமுறை வழக்கு எண்.1335/1988 முதலில் குசும் கோருலே (அதாவது கீதாஞ்சலி ஜி. சோஹானி) [வழக்கு எண். 1335/1988 இல் அசல் வாதி எண்.2] வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது, மேலும் வைத்தி குடும்பம் மற்றும் ஒப்புதல் விதிமுறைகளின் மீது ஆணை நிறைவேற்றப்பட்டது. 16.02.2005 தேதியிட்ட உத்தரவை பார்க்கவும், அதைத் தொடர்ந்து 03.10.2005 தேதியிட்ட ஒப்புதல் உத்தரவு, தரப்பினர்களிடையே நிறைவேற்றப்பட்டது, அதாவது. GIC ஊழியர்களின் சோனல்விஹார் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் (வழக்கு எண். 1355/1988 இல் அசல் வாதி எண். 1) மற்றும் ஓஸ்வால் எண்டர்பிரைசஸ் (வழக்கு எண். 1355/1988 இல் பிரதிவாதி எண். 57). சந்தேகத்திற்கு இடமின்றி, வழக்கு எண். 1335/1988 நீதிமன்றத்தால் தகுதியின் அடிப்படையில் ஆராயப்படவில்லை, ஏனெனில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தரப்பினர் சமரசம் செய்துகொண்டனர், மேலும் 16.02.2005 தேதியிட்ட உத்தரவைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் ஒத்திசைவு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. 03.10.2005. இதன்

விளைவாக, இரு தரப்பினருக்கும் இடையில் வந்த ஒப்புதல் விதிமுறைகளின் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது

16. 16.02.2005, 03.10.2005 தேதியிட்ட உத்தரவுகளில் மேல்முறையீட்டாளர்கள் தரப்பினர் இல்லை. எனவே, அது வாதிகளை கட்டுப்படுத்தாது. அந்த உத்தரவுகளை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்.3162/2005 தனியாக முடிவு செய்யப்படவேண்டியுள்ளது. 22.02.2014 தேதியிட்ட தீர்ப்புக்கு உட்படாமல் இந்நீதிமன்றம் முடிவு செய்யவேண்டியுள்ளது.

17. பாம்பே உயர்நீதிமன்றத்தின் நீதியராயம் 16.02.2005 ல் பிறப்பிக்கப்பட்ட தன்னுடைய தீர்ப்பில் இந்த மேல்முறையீட்டாளர்கள் தரப்பினராக இல்லாததால் அவர்களை கட்டுப்படுத்தாது என்று உத்தரவில் கூறப்பட்டுள்ளது, அவர்களின் உரிமையை தனி வழக்கில் முடிவு செய்துகொள்ளலாம் என்றும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பின் வரிகள் பின்வருமாறு:

" 13. மேற்படி திருமதி. சித்ரலேகா பில்டர்ஸ், ஒரு கூட்டாண்மை நிறுவனம் அல்லது கூறப்பட்ட கூட்டு நிறுவனத்தின் பங்குதாரர். தடைசெய்யப்பட்ட உத்தரவின் மூலம் ஆணையின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட தீர்வு, சம்மத விதிமுறைகளுக்கு தரப்பினரிடையே உள்ளது. தற்போதைய மேல்முறையீடு செய்பவர்கள் ஒப்புதல் விதிமுறைகளுக்குக் தரப்பினர் அல்ல என்பதை ஒப்புக்கொள்ளலாம் மற்றும் உண்மையில் தடை செய்யப்பட்ட உத்தரவு நிறைவேற்றப்பட்ட தேதியில், அவர்கள்

வழக்கின் தரப்பினராகக் கூட சேர்க்கப்படவில்லை. எனவே, பிப்ரவரி 16, 2005 தேதியிட்ட ஒப்புதல் விதிமுறைகள், அதன் அடிப்படையில் பிப்ரவரி 16, 2005 தேதியிட்ட இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தரவு, மேல்முறையீடு செய்பவர்களை கட்டுப்படுத்தவில்லை என்பது வெளிப்படையானது.

14. ஒத்திசைவு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 16.02.2005 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒத்திசைவு தீர்ப்பாணை மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்தாது. முன்பு கூறியது போல், தடை செய்யப்பட்ட உத்தரவின் கீழ், வழக்கு தள்ளுபடி செய்யப்படவில்லை. தற்போதைய மேல்முறையீட்டில் சவாலான விஷயமாக இல்லாத, அடுத்தடுத்த உத்தரவின் மூலம் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, இந்த மேல்முறையீட்டில், வழக்கை மீட்டெடுப்பதற்கான உத்தரவை நிறைவேற்ற முடியாது.

15. மேல்முறையீட்டாளர்களின் உரிமை தடை செய்யப்பட்ட உத்தரவினால் பாதிப்படையாது, அதனால், அந்த தடைசெய்யப்பட்ட உத்தரவில் இந்த நீதிமன்றம் தலையீடு செய்யவேண்டிய அவசியம் இல்லை. கேள்விக்குரிய சொத்து தொடர்பாக மேல்முறையீட்டாளர்களால் கோரப்படும் உரிமைகள் மற்றும் அதே சொத்து தொடர்பாக 2வது மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட சிவில் வழக்காக கோரப்படும் உரிமைகள் நிலுவையில் இல்லை. மேல்முறையீட்டாளர்களின் உரிமையையோ மற்றும் எதிர்மனுதாரரின் உரிமையையோ நிலுவையில் உள்ள வழக்கில் முடிவு செய்துகொள்ளலாம்."

18. 03.10.2005 உடன் தொடர்ந்து 16.02.2005 அன்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டபோது, மேல்முறையீடு செய்பவர்கள் ஒப்புதல் விதிமுறைகளுக்கு ஒரு தரப்பினராக இல்லாததால், அது மேல்முறையீட்டாளர்களை பிணைக்காது என்று நாங்கள் கருதுகிறோம். அதன் சட்ட விளைவு சட்டத்தின்படி அதன் சொந்த தகுதியின் அடிப்படையில் அவர்களின் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நிலைமுறை வழக்கில் ஆராயப்பட உள்ளது. பாம்பே உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சரியானது என்பதால் நாங்கள் அதில் தலையிட விரும்பவில்லை.

19. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த அமிகஸ் கியூரியின் சமர்ப்பிப்பு, மற்றும் மேல்முறையீட்டாளர் நேரில் சமர்ப்பிப்பது என்னவென்றால், 16.02.2005 தேதியிட்ட ஒப்புதல் ஆணையைத் தொடர்ந்து, 03.10.2005 உடன், சட்டத்தின் பிரிவு 96 இன் கீழ் அவர்களின் உத்தரவின் பேரில் சவால் செய்யப்பட்டவை, தகுதியின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் நீதியராயத்தால் ஆராயப்பட வேண்டும், மேலும் சட்டத்தின் பிரிவு 96 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டுக்கான அவர்களின் கணிசமான உரிமையை வெறுமனே முன்மாதிரியாகக் கருதி சிதைத்திருக்க முடியாது. 3162/2005 என்ற நிலைமுறை வழக்கு அவர்களின் வழக்கில் விரும்பப்பட்டது, தீர்ப்பு நிலுவையில் உள்ளது. 16.02.2005 தேதியிட்ட ஆணை மற்றும் 03.10.2005 தேதியிட்ட ஆணை ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கு எண். 1335/1988 நீதிமன்றத்தால் நடைமுறைக்கு வந்த ஒப்புதல் விதிமுறைகளின் அடிப்படையில் சமர்ப்பிப்பில் எந்த அர்த்தமும் இல்லை. கொடுக்கப்பட்ட சூழ்நிலையில், பின்னர் வழக்குத்

தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்களுக்கு, CPC யின் பிரிவு 96 ன் கீழ் மேல்முறையீடு செய்ய உரிமை உண்டு. எவ்வாறாயினும், மேல்முறையீட்டாளர்கள் ஒப்புதல் ஆணைகளில் ஒரு தரப்பினராக இல்லாததால், 16.02.2005 மற்றும் 03.10.2005 தேதியிட்ட ஒப்புதல் உத்தரவுகளின் சட்டப்பூர்வ விளைவை ஆய்வு செய்ய நீதிமன்றம் திறக்கப்படவில்லை. 16.02.2005 தேதியிட்ட ஒப்புதல் ஆணைகளைத் தொடர்ந்து 03.10.2005 தேதியிட்டதைக் கேள்விக்குட்படுத்தும் வகையில், அவர்களின் வழக்கில் ஒரு முக்கிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டவுடன், அவர்களின் நிகழ்வில் தொடங்கப்பட்ட நிலுவையில் உள்ள நடவடிக்கைகளில் அதன் சொந்த தகுதியின் அடிப்படையில் அது சுயாதீனமாக ஆராயப்படும்.

20. மேன்முறையீடு செய்பவர்களின் உரிமைகளைப் பொறுத்த வரையில், 22.07.2014 தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்ட தீர்ப்பில் உயர்நீதிமன்றத்தால் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும், 22.07.2014 தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்ட தீர்ப்பில் உயர்நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்ட அவதானிப்புகள் /கண்டுபிடிப்புகள், மேல்முறையீட்டாளர்களின் உரிமைகளுக்கும், நிலுவையில் உள்ள வழக்கு எண். 3162/2005 க்கும் எந்த விதத்திலும் பாதகமாக இல்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட 22.07.2014 தேதியிட்ட குற்றஞ்சாட்டப்பட்ட தீர்ப்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய அவதானிப்புகளால் பாதிக்கப்படாமல், சட்டத்தின்படி அதன் சொந்த தகுதியின் அடிப்படையில் நீதிமன்றத்தால் சுயாதீனமாக ஆராயப்படலாம்.

21. இவ்வழக்கானது 2005 ல் போடப்பட்டுள்ள காரணத்தினால், இன்றையிலிருந்து ஒரு வருடத்திற்குள், உயர்நீதிமன்றம் வழக்கு எண்.3162/2005 ல் விரைவில் விசாரித்து தீர்ப்பாளிக்கவேண்டியது அவசியமாகிறது.

22. மேற்சொன்ன உத்தரவுகளின்படி இந்த உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கானது முடிக்கப்படுகிறது. செலவு தொகையில்லை.

23. நிலுவையில் உள்ள மனுக்களும் முடிக்கப்படுகிறது.

24. இந்த நீதிமன்றத்திற்கு உதவிய திரு.நிகில் நைய்யார் மூத்த வழக்கறிஞரை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது.

மேல்முறையீடு முடிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "